# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 134 | 4 Pages | 17.12.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 134 | 4 பக்கங்கள் | 17.12.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மீடியா துறையில் வலுவாக கால் பதிக்கும் அதானி குழுமம்: IANSன் 50.50 சதவீத பங்கை வாங்கியது




டெல்லி, டிச.17

இந்தியாவில் உள்ள முக்கிய கோடீஸ்வரர்களில் ஒருவராக அதானி திகழந்து வருகிறார். அம்பானி குழுமத்திற்கு எதிராக அதானி குழுமம் எல்லாத்துறைகளிலும் கால்பதித்து கடந்த 10 ஆண்டுகளில் அசுர வளர்ச்சி அடைந்துள்ளது.

அதானி குழுமம் மீடியா துறைகளில் ஆதிக்கம் செலுத்த ஏ.எம்.ஜி. மீடியா நெட்வொர்க் லிமிடெட் என்ற பெயரில் நிறுவனத்தை நடத்தி வருகிறது.

இந்த நிறுவனம் ஏற்கனவே இந்தியாவின் முன்னணி செய்தி நிறுவனமானஎன்.டி.டிவியின்ஒருகுறிப்பிட்டஅளவிலானபங்குகளை வாங்கியது. டிஜிட்டல்பிளாட்ஃபார்மில்பி.க்யூ.பிரைம்என்றவணிகம் மற்றும் நிதி தொடர்பான செய்தி சேனலை குயின்டில்லியன் மீடியாவிடம் இருந்து வாங்கியது.

இந்த நிலையில் ஐ.ஏ.என்.எஸ். செய்தி நிறுவனத்தின் 50.50 சதவீத பங்குகளை வாங்கியுள்ளது. இதனால் மூலம் ஐ.ஏ.என்.எஸ். செய்தி நிறுவனத்தில் முக்கிய நிர்வாகிகளை நியமிப்பது முதல் நீக்குவது வரையிலான அனைத்து நடவடிக்கைகளையும் அதானி குழும நிறுவனத்தில் மேற்கொள்ள முடியும்.

இந்த நிறுவனத்தின் வருமானம் 2021 நிதியாண்டில் 10.3 கோடி ரூபாயாகவும், 2022 நிதியாண்டில் 9.4 கோடி ரூபாயாகவும், 2023 நிதியாண்டியில் 12 கோடி ரூபாயாகவும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.ஏ.என்.எஸ். அல்லது இந்தோஏசியன் நியூஸ் சர்வீஸ் 1986ல் வடக்கு அமெரிக்காவில் இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்து அங்கு வாழும் இந்திய சமூதாயத்தினருக்காக தொடங்கப்பட்டது. பின்னர் 1970 இந்தியா, தெற்கு ஆசியாவில் கவனத்தை செலுத்தி முழு நேர செய்தி சேனலாக மாறியது.

## காங்கிரசில் இணைகிறார் காயத்ரி?



புதுடெல்லி, டிச.17

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான கேசி வேணுகோபால் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், காங்கிரஸ் கட்சி தொடங்கி 138 ஆண்டுகள் ஆனதை நினைவு கூரும் விதமாக தேசத்துக்காக நன்கொடை தாருங்கள் என்ற திட்டம் நாளை மறுதினம் தொடங்கப் போவதாக தெரிவித்தார். இதில் 138, 1380, 13800 என தங்களால் முடிந்த நிதியை மக்கள் அளிக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், பாஜகவில் இருந்து விலகிய நடிகை காயத்ரி ரகுராம், 1380 ரூபாய் நன்கொடை செலுத்தி, அதற்கான ரசீதையும் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் அதில், எங்களுக்கு புதிய தலைமுறை வேண்டும், ஆட்சி மாற்றம் வேண்டும், நாட்டிற்காக உயிரையே அர்ப்பணித்த ஒரு குடும்பத்தை சுயநலத்திற்காக இழிவுபடுத்தும் பா.ஜ.க நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்கு போலி சாமியார் வேஷம் வேண்டாம். வன்முறை, வெறுப்பு, பாலியல் துன்புறுத்தல், மோசடி, ஜனநாயகத்தை அபகரித்தல், இந்து மதத்தின் பெயரால் அரசியல் ஆகியவற்றை நாங்கள் விரும்பவில்லை. சுதந்திர போராட்ட வீரர்களான காங்கிரஸ் தலைவர்கள் மீது பா.ஜ.க. சவாரி செய்கிறது. சுதந்திர போராட்ட வீரர்களின் போராட்டத்தை இழிவுபடுத்தும் பா.ஜ.க.வின் பொய்களை நாங்கள் விரும்பவில்லை. பாதுகாப்பில் தோல்வியடைந்த பா.ஜ.க. பிஜேபியை விரும்பாதவர்கள் மற்றும் பங்கேற்க விரும்புபவர்கள் நன்கொடை அளியுங்கள் http://donateinc.in என பதிவிட்டுள்ளார்.

## இது ஏன் நடந்தது தெரியுமா?: பாராளுமன்றத்தில் வண்ண புகை குண்டு தாக்குதல் குறித்து ராகுல் காந்தி




புதுடெல்லி, டிச.17

பாராளுமன்றத்தின் மக்களவையில் பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து எம்.பி.க்கள் இருக்கும் இடத்திற்குள் திடீரென 2 பேர் குதித்தனர். அவர்கள் இருவரும் அங்கு வண்ண புகை குண்டுகளை வீசினர். இந்தச் சம்பவம் நாட்டையே உலுக்கியது.

அதிக பாதுகாப்பு நிறைந்த இடத்திற்குள் அவர்கள் எவ்வாறு சென்றனர், இது மிகப்பெரிய பாதுகாப்பு குறைபாடு என எதிர்க்கட்சிகள் மத்திய அரசுமீது குற்றம்சாட்டி வருகிறது.

பரிந்துரை பாஸ் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. பிரதாப் சிம்ஹா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், காங்கிரஸ் எம்பியான ராகுல் காந்தி இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், இது ஏன் நடந்தது? நாட்டின் முக்கிய பிரச்சினை வேலையின்மை. பிரதமர் மோடியின் கொள்கைகளால் நாட்டின் இளைஞர்களுக்கு வேலை கிடைக்காமல் போனது. வேலையின்மை மற்றும் பணவீக்கம் தான் காரணம் என குற்றம் சாட்டினார்.

# மிச்சாங் புயல் பாதிப்பு ஒரு மாத சம்பளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கிய தி.மு.க. எம்.பிக்கள்

சென்னை, டிச.17

மிச்சாங் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என் ஒரு மாத ஊதியத்தை வழங்குகிறேன் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த வாரம் அறிவித்தார். மேலும் அனைத்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் நிதி அளித்திடுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதையடுத்து முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தொழில் அதிபர்கள், திரைப்பிரபலங்கள் என பலரும் நிதி வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தி.மு.க. எம்.பி.க்கள் சந்தித்தனர். அப்போது முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு 30 தி.மு.க. மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத் தொகைக்கான காசோலையே வழங்கினார்கள்.



# விஜயகாந்த் உடல்நிலை பின்னடைவுக்கு காரணம் இதுதான்

சென்னை, டிச.17

சென்னை கோயம்பேட்டில் தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பிரேமலதா கூறியதாவது:

★ அரசியலில் இருப்பதே சவால் தான் குறிப்பாக பெண்கள் இருப்பது மிகப்பெரிய சவால் அதற்கு உதாரணம் ஜெயலலிதா.

★ எந்த சவாலையும் சந்திக்க தயார்.

★ அரசியல் இயக்கப் பணிகளில் விஜயகாந்த் உடன் தொடக்கத்தில் இருந்தே பயணித்து வருகிறேன்.

★ தொண்டர்கள் மீதான நம்பிக்கை உடன் பயணத்தை தொடர்ந்து வருகிறோம்.

★ விஜயகாந்த் உடல்நிலையில் சிறிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

★ விஜயகாந்தால் எம்.எல்.ஏ. ஆனவர்கள் பிரிந்து சென்றது அவரது உடல்நிலை பின்னடைவுக்கு காரணம் ஆனது.




★ விஜயகாந்த்தின் உத்தரவுப்படியே தே.மு.தி.க.வின் செயல்பாடுகள் எப்போதும் இருக்கும்.

★ தொண்டர்களுக்காக நிச்சயமாக தேசிய முற்போக்கு திராவிட கழகம் வெற்றி வியூகம் ஒன்றை மட்டுமே அமைப்போம். அதில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

★ உட்கட்சி தேர்தல் முடிந்தவுடன் தேமுதிகவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு நடைபெற இருக்கிறது. அன்றைய கூட்டத்தில் விஜயகாந்த் கலந்து கொள்வார். முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார் என்று ஆரம்பத்தில் இருந்து சொல்லி வருகிறேன்.

★ பொதுச்செயலாளராக நான் தேர்வானது திடீரென எடுத்த முடிவல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.

# எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணி இறுதிக்கட்டத்தை எட்டுகிறது

திருவொற்றியூர், டிச.17

சென்னையில் மிச்சாங் புயலால் ஏற்பட்ட பெரு வெள்ளம் எண்ணூர் முகத்துவார பகுதியில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

கொசஸ்தலை ஆற்றில் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளத்தில் அப்பகுதியில்உள்ளஎண்ணைநிறுவனங்களில் தேங்கி இருந்த எண்ணெய் கழிவுகள் அடித்துச் செல்லப்பட்டு முகத்துவாரம் மற்றும் கடல் பகுதியில் கலந்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை புரட்டிப் போட்டது.

மீனவர்களின் 700க்கும் மேற்பட்ட படகுகள், வலைகள் ஆகியவை எண்ணெய் கழிவுகளில் சிக்கி சேதமடைந்தன. இதன் காரணமாகவும் எண்ணை படலங்கள் தேங்கி நிற்பதாலும் அப்பகுதியில் உள்ள 8 மீனவ கிராம மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருகிறார்கள்.

4 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில் எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணி கடந்த 10ந்தேதி முதல் நடை பெற்று வருகிறது.

தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி எண்ணெய் கழிவுகளை அகற்றுவதற்கு உத்தரவு பிறப்பித்து வரும் நிலையில் கடல் பகுதி மற்றும் முகத்துவாரத்தில் தேங்கியுள்ள எண்ணெய் கழிவுகள் வேகமாக அகற்றப்பட்டு வருகின்றன.



சி.பி.சி.எல். நிறுவனம் மீனவர்களோடு சேர்ந்து எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணியில் வேகம் காட்டி வருகிறது. 70க்கும் மேற்பட்ட படகுகளில் சென்று மீனவர்கள் எண்ணெய் கழிவுகளை அகற்றி பேரல்களில் அள்ளி வெளியேற்றி வருகிறார்கள்.

எண்ணெய் கழிவுகளை அகற்றுவதற்கு 'ஆயில் சக்கார்' எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2 எந்திரங்கள் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த எந்திரங்களை படகுகளில் கட்டி எண்ணெய்கழிவுகள் தேங்கியுள்ள பகுதிகளுக்கு இழுத்துச் சென்று பேரல் பேரலாக கழிவுகள் வெளியேற்றப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கடந்த 6 நாட்களில் 15 டன் எண்ணெய் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணி இறுதிக்கட்டத்தை எட்டும் நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தண்ணீரில் மிதந்தபடியே கழிவுகளை சேகரித்து டிரம்களுக்கு அனுப்பும் 2 எந்திரங்கள் மூலமாக பணிகள் நடைபெற்று வருவதால் எண்ணெய் கழிவுகள் ஓரளவுக்கு வேகமாக அகற்றப்பட்டு வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணிகள் தொடர்பாக கடந்த 2 நாட்களுக்கு முன்பு உத்தரவு பிறப்பித்த தேசியபசுமைதீர்ப்பாயம்17ந்தேதிக்குள் (நாளை) எண்ணெய் கழிவுகளை அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இதனால் எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாளைமறுநாள் (திங்கட்கிழமை) தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் எண்ணெய் கழிவுகள் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை வர உள்ளது.

அன்றைய தினம் இதுவரை அகற்றப்பட்டுள்ள எண்ணெய் கழிவுகள் எத்தனை டன்? என்பது பற்றிய முழு விவரங்களை அதிகாரிகள் தெரிவிக்க உள்ளனர்.

இதற்கிடையே எண்ணெய் கழிவுகளை அகற்றுவதற்கு மும்பை மற்றும் ஒடிசாவில் இருந்து நவீன எந்திரங்கள் இன்று வரவழைக்கப்பட இருப்பதாக மாசுகட்டுப் பாட்டு வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த எந்திரங்கள் எண்ணெய் கழிவுகளை அகற்றுவதில் முக்கிய பங்காற்றும் என்றும், இதன் மூலம் எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணிகள் இன்னும் சில தினங்களில் முடிவுக்கு வரும் என்றும், மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




# நாமக்கலில் வைகுண்ட ஏகாதேசி: சிறப்பு ஏற்பாடுகள் தீவிரம்





நாமக்கல் டிச 17

நாமக்கல் நகரின் மையப்பகுதியில் ஒரே கல்லால் ஆன சாலிகிராமம் மலை அமைந்துள்ளது. புராண கால வரலாறு மிக்க இந்த மலையின் கிழக்கே தரையில் இருந்து சுமார் 200 அடி உயரத்தில் மலையை குடைந்து அரங்கநாதர் திருசயன கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளார்.

ஷிராப்திநாதர் சிங்கமுகம் கொண்ட மிக குருயஅரமான கார்கோடகன் என்ற பாம்பனையில் ஸ்ரீ ரங்கநாதர் என்ற திருநாமத்தோடு யோகநித்திரை புரிகிறார். திருவடி புறத்தில் தாமஸகுணம் படைத்த அரக்கர்களான மது, கைடபர் இருவரும் தீச்செயல் புரிய வந்தவர்கள் பகவத் சரணார விந்தங்களில் மலர் வழிபாடு செய்கிறார்கள். உந்தியில் நான் முகனும், சங்கு, சக்கர, கதை, கத்தி,வில் முதலிய பஞ்சாயுதங்களும் மனித உருவுடனும், நாரதர், தும்புரு முதலிய முனிவர்கள் சூரிய, சந்திரர்கள் யாவரும் பகவானைத் துதிக்கிறார்கள். ஸ்ரீ நரசிம்மர் திருக்கோயிலில் அமைந்திருப்பது போல் இங்கு சங்கர நாராயணனும் எதிர்புறத்தில் வாமன திரிவிக்கிரம வடிவங்கள் சிற்ப வடிவில் அமைந்திருக்கின்றன. இக்குடைவரையில் எழுந்தருள்யுள்ள பள்ளிகொண்ட பெருமாளை கார்கோடகன் தவம் இயற்றி பெருமானை மகிழ்வித்து அவருக்கு படுக்கையானான் தினமும் கமலாயத்திலிருந்து தீர்த்தம் கொணர்ந்து ஸ்ரீ ரங்கநாதருக்கு புஜை செய்கிறார் என்பதற்கு சான்றாக இன்னும் மலைப்பாதையில் குளத்திலிருந்து கோயில் வரை பாம்பு சென்ற வழி சுவடு காணப்படுகிறது.

இத்திருத்தலத்தில் ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசி பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகும். அதேபோல் இந்த வருடமும் இந்த விழா வரும் 23.12.2023 ஆம் தேதி சனிக்கிழமை அதிகாலை 4:15 மணிக்கு மேல் 5:00 மணிக்குள் இத்திருத்தலத்தின் சொர்க்கவாசல் (பரமபத வாசல்) ஸ்ரீ வைகானச ஆகம முறைப்படி புஜை செய்யப்பட்டு திறக்கப்பட உள்ளது.

இத்திருவிழாவின் கட்டளைதாரரும் தொழிலதிபருமான நாமக்கல் கவுண்டர் டிரேடிங் கம்பெனி உரிமையாளருமான என்.கே.பி.ரவிக்குமார் என்கிற ப.ரவிக்குமார் விழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார். சொர்க்கவாசல் திறப்பு விழாவில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், ஆட்சியர் சா.உமா, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஷ்கண்ணன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் ஏ.கே.பி.சின்ராஜ், ஈரோடு கணேசமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேர்ந்தமங்கலம் கே.பொன்னுசாமி, திருச்செங்கோடு ரூடவ்.ஆர்.ஈஸ்வரன், குமாரபாளையம் பி.தங்கமணி, பரமத்தி வேலூர் எஸ்.கே.சேகர், சுற்றுலா பண்பாடு மற்றும் அரணைத் துறை அரசு முதன்மை செயலாளர் க.மணிவாசன், சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, நகர மன்ற உறுப்பினர்கள் டி.டி.சரவணன், கே.கலைச்செல்வி அன்பரசன், இந்து சமய அறநிலைத்துறையின் பல்வேறு பிரிவுகளை சார்ந்த மாநில மற்றும் மாவட்ட அலுவலர்கள் கா.வி.முரளிதரன், அ.சங்கர், எஸ்.ஹரிப்ரியா, ந.திருமகள், மா.கவிதா, சி.இலட்சுமணன், போ.ஜெயராமன், கோ.சே. மங்கையர்கரசி, ஆ.தி.பரஞ்சோதி, சு.சுவாமிநாதன், சு.சுந்தர் மாவட்ட வருவாய் அலுவலர் ரே.சுமன், நகர் அமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம். மதுரா செந்தில் மற்றும் பலர் கலந்து கொள்ள உள்ளனர். இதற்கான தீவிர ஏற்பாடுகளை கோவில் உதவி ஆணையர் இரா.இளையராஜா, கண்காணிப்பாளர் வீ.அம்சா, அரங்காவலர் குழு தலைவர் கா.நல்லுசாமி, உறுப்பினர்கள் செள.செல்வசீராளன், இராம சீனிவாசன், ம.மல்லிகா குழந்தைவேல், எம்.ஜி.எஸ்.ரமேஷ் பாபு மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்

# நீலகிரியில் காட்டேரி முதல் லவ்டேல் வரையிலான சாலை விரிவாக்கம் செய்யும் பணி: அமைச்சர்கள் நேரில் ஆய்வு



ஊட்டி, டிச.17

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகருக்கு செல்வதற்கு மாற்றுப்பாதையாக காட்டேரி லவ்டேல் சாலை பயன்படுத்தப்பட்டு வருகிறது. 20.50 கி.மீ தொலைவிலான இந்த சாலை மாற்றுப்பாதை திட்டத்தின்கீழ், ரூ.46.42 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் மற்றும் தடுப்புச்சுவர் கட்டும் பணியினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். முன்னதாக, உதகை கைகாட்டி சாலை காந்திநகர் பகுதியில் கனமழை காரணமாக சேதமடைந்தது. இந்த சாலையினை தற்காலிகமாக 600 மணல் மூட்டைகள் கொண்டு அடுக்கி வைக்கப்பட்ட பணியினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்த்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாவட்ட கலெக்டர் மு.அருணா, நெடுஞ்சாலைத்துறை முதன்மை பொறியாளர்கள் சந்திரசேகர், கீதா, முருகேசன், கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர்கள் குழந்தைராஜ் (உதகை), தரக்கட்டுப்பாட்டு பிரிவு கோட்டப்பொறியாளர் தங்கராஜ் (கோவை) உட்பட பலர் உடனிருந்தனர்.

# கலைஞர் மகளிர் உரிமை தொகை.. விண்ணப்பிக்காதவர்களுக்கு குட் நியூஸ் சொன்ன அமைச்சர்



சென்னை, டிச.17

தமிழகத்தில் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த செப்டம்பர் 15ம் தேதி துவங்கி வைத்தார். அப்போது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களின் வங்கி கணக்கிற்கு மாதம் ரூ. 1000 அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் விடுபட்டவர்களுக்கு கடந்த 10ம் தேதி 2வது கட்டமாக பணம் வழங்கப்பட்டது. இதில் 7 லட்சத்து 35 ஆயிரம் பெண்களுக்கு ரூ. 1000 வழங்கப்பட்டது. அந்த வகையில் இரண்டு கட்டங்களை சேர்த்து 1 கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 பேர் இதுவரை மாதம் ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது.

இதுதவிர கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் பயன்பெறாதவர்கள் மேல்முறையீடு செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்து இருந்தது. இதற்காக கடந்த அக்டோபர் 25ம் தேதி வரை மேல்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த நிலையில், கலைஞர் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான புதிய விண்ணப்பம் ஜனவரிக்கு பிறகு வழங்கப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்து இருக்கிறார்.தகுதிவாய்ந்த மகளிர் அனைவரும் இந்த திட்டத்தில் பயன்பெற வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்துள்ளதால், இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# காற்றாலை லாரிகளை சிறைப்பிடித்து பொதுமக்கள் போராட்டம்

தாராபுரம், டிச.17

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்த பொன்னிவாடி அருகே காற்றாலை அமைப்பதற்கு தேவையான உபகரணங்களை ஏற்றிக் கொண்டு 26 சக்கரங்கள் கொண்ட 13 கனரக லாரிகள் வந்தன. இந்த லாரிகளால் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக கூறி அப்பகுதி பொதுமக்கள் திடீரென லாரிகளை சிறைப்பிடித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து அப்பகுதி பொது மக்கள் கூறுகையில்,

தாராபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளான மூலனூர், கன்னிவாடி மற்றும் குடிமங்கலம் ,கோவிந்தாபுரம், சத்திரம், குண்டடம், மடத்துக்குளம் என திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காற்றாலைகள் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு சிறிய அளவிலான காற்றாடிகள் அமைக்கப்பட்டு வந்தது.

இப்பொழுது ஒரு காற்றாடி ரூ.8 கோடி முதல் 12 கோடி வரை பெரிய அளவில் அமைக்கப்பட்டு வருகிறது . ஆலைகளில் அமைக்கப்படும் காற்றாடி இறக்கைகள் மற்றும் உபகரணங்கள் 200 அடி நீளமுள்ள லாரிகளில் ஏற்றி வருகின்றனர்.

தாராபுரத்தில் இருந்து பகவான்கோவில், பொன்னிவாடி செல்லும் சாலையானது 7 மீட்டர் கொண்ட சாலை ஆகும் .இதில் 6 மீட்டர் அகலமுள்ள லாரிகள் வருகின்றன. அதுவும் இந்த லாரிகளானது ஒவ்வொரு லாரியாக வராமல் தொடர்ச்சியாக 10 லாரிகள், 15 லாரிகள் என சாலையில் வரும் போது போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. இதனால் காலையில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே குறிப்பிட்ட நேரத்தில் குறைந்த அளவில் மட்டும் லாரிகள் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுடன் மூலனூர் இன்ஸ்பெக்டர் அருள், சப்இன்ஸ்பெக்டர் லோகநாதன் மற்றும் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் பொது மக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம் த்ரிஉமுருகன்பூண்டி பாப்பீஸ் வீஸ்டா ஹோட்டலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் திருப்பூர் மாவட்ட அளவிலான முதலீட்டாளர்களுடனான கள நிகழ்வு கூடத்தினை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு தொழில் கடன் ஒப்புதல் ஆணைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வழங்கினார். உடன் கலெக்டர் கிறிஸ்துராஜ், மேயர் தினேஷ்குமார், தலைவர், இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் தென்பிராந்திய பொறுப்பாளர் சக்திவேல், பொதுமேலாளர் ராமலிங்கம், தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.

# பொங்கல் பண்டிகைக்கு சொந்த ஊர் செல்ல அரசு விரைவு பஸ்களில் 22 ஆயிரம் பேர் முன்பதிவு

சென்னை, டிச.17

பொங்கல் பண்டிகை ஜனவரி 15ந்தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் சொந்த ஊருக்கு செல்ல பஸ், ரெயில்களில் முன்பதிவு செய்து வருகின்றனர். ரெயில்களில் இடங்கள் நிரம்பி விட்டதால் அரசு பஸ்களை நோக்கி மக்கள் ஆர்வமுடன் வருகிறார்கள்.

16, 17 ஆகிய நாட்கள் மாட்டு பொங்கல், உழவர் தினம் விடுமுறை நாட்களாகும். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களை தொடர்ந்து பொங்கல் திங்கட்கிழமை வருவதால் தொடர்ந்து 5 நாட்கள் விடுமுறைக்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சொந்த ஊரில் பொங்கலை கொண்டாட மக்கள் முடிவு செய்து பயணத்தை திட்டமிடுகின்றனர். இந்த நிலையில் அரசு விரைவு பஸ்களில் முன்பதிவு கடந்த 2 நாட்களுக்கு முன்பு தொடங்கியது. ஜனவரி 12, 13 ஆகிய தேதிகளில் பயணம் செய்ய மக்கள் ஆர்வமாக உள்ளனர். சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு செல்லஇந்த2நாட்களிலும் 22 ஆயிரம் பேர்முன்பதிவு செய்துள்ளனர்.

12ந்தேதி (வெள்ளிக்கிழமை) பெரும்பாலானவர்கள் சொந்த ஊர்களுக்கு புறப்படுவார்கள். அதனால் அரசு பஸ்களில் இடங்கள் நிரம்பின. முதலில் 250 பஸ்களில் இடங்கள்நிரம்பிவிட்டன.

அதனை தொடர்ந்து மேலும் 300 பஸ்களுக்கு முன்பதிவு செய்யப்படுகிறது. இடங்கள் நிரம்ப நிரம்ப பிற போக்குவரத்து கழக பஸ்கள் முன்பதிவு செய்யப்படும் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை பயணம் அதிகளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 5 நாட்கள் தொடர் விடுமுறை வருவதால் பொதுப் போக்குவரத்து பயன்பாடு அதிகரிக்கும் என்றும் கூறினார். கிறிஸ்துமஸ் பண்டிகை 25ந்தேதி (திங்கட்கிழமை) வருவதால் அதனோடு மேலும் 2 நாட்கள் விடுமுறை கிடைக்கிறது. அதனால் பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்கு செல்பவர்கள் ஆர்வமாக முன்பதிவு செய்து வருகின்றனர். 23 ந்தேதி பயணம் செய்ய 25 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதில் 18 ஆயிரம் பேர் சென்னையில் இருந்த செல்ல பதிவு செய்துள்ளனர். கிறிஸ்துமஸ் பண்டிகை முன்பதிவுபெரும்பாலான அரசு பஸ்களில் முடிந்து விட்டன. குறிப்பாக தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய பஸ்கள் அனைத்தும் நிரம்பி விட்டன. கூடுதலாக பஸ்களை இயக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# சென்னைடாக்கா இடையே கூடுதலாக நேரடி விமான சேவை தொடங்கியது

ஆலந்தூர், டிச.17

சென்னையில் இருந்து வங்காளதேச தலைநகர் டாக்காவுக்கு ஏற்கனவே, இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான நிறுவனமும், யூ.எஸ். பங்களா விமான நிறுவனமும், தினசரி நேரடி விமான சேவையை இயக்கி வருகின்றன.

இந்நிலையில்சென்னை டாக்கா இடையே பயணிகள் போக்குவரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதையடுத்து பீமன் பங்களாதேஷ் ஏர்லைன்ஸ் என்ற விமான நிறுவனம், டாக்கா சென்னை இடையே, புதிதாக நேரடி விமான சேவையை, இன்று முதல் தொடங்கியது. வாரத்தில் திங்கள், வியாழன், சனி, ஆகிய 3 தினங்களில் இந்த விமான சேவைகள் இயக்கப்பட உள்ளன.

இந்த விமானம் வாரத்தின் 3 நாட்களிலும், பகல் 12.50 மணிக்கு டாக்காவில் புறப்பட்டு, மாலை 3.20 மணிக்கு, சென்னை விமான நிலையம் வருகிறது.

அதே விமானம் மீண்டும்,மாலை4.15மணிக்கு, சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு, இரவு 7.30 மணிக்கு டாக்கா விமான நிலையம் சென்றடைகிறது.

இப்போது வாரத்தில் 3 நாட்கள் மட்டும் இயக்கப்படும் இந்த விமான சேவை, பயணிகளின் வரவேற்பை பொறுத்து, தினசரி விமான சேவையாக மாற்றப்பட வாய்ப்பு உள்ளது என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 5 ஆயிரம் குடும்பத்தினருக்கு வெள்ள நிவாரண உதவி சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்




சென்னை, டிச.17

வடசென்னை கிழக்கு மாவட்ட மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் ஒன்றியத்தில் உள்ள விளாங்காடுப்பாக்கம் ஊராட்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரம் குடும்பத்தினருக்கு ஊராட்சி மன்ற தலைவர் பாரதி சரவணன் ஏற்பாட்டில் நிவாரண உதவியாக 5 கிலோ அரிசி வழங்கப்பட்டது. தி.மு.க. ஒன்றிய செயலாளர் வக்கீல் புழல் பெ.சரவணன் தலைமையில் நடந்த இந்த விழாவில் மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. நிவாரண உதவிகளை வழங்கினார்.

ஒன்றிய தலைவர் செல்வ மணி, துணைத் தலைவர் சாந்தி பாஸ்கரன், தங்கராஜன், காமராஜ், மல்லி ராஜா, பரிமளச் செல்வம், எழிலன், கபிலன், அருண், ராமு, திருநாவுக்கரசு, அப்போஸ், டில்லி பாபு, கோவிந்தராஜ், சதிஷ், நாகராஜ், வெங்கடேசன், அஜித்குமார், ராஜேஷ், சீனிவாசன், சீனு, இளைஞர் அணி தனுஷ் சரவணன், ரோகேஷ், சரவணன், செல்வகுமார், விமல், பிரேம்குமார், வார்டு உறுப்பினர் சத்யசீலன், ரதி சீனிவாசன், நிலவழகி இனியன், அருணாதேவி, சீனு, ஆனந்தி நாகராஜன், தர்மிரவி, நாம தேவன், அசோக், அப்பன் ராஜ், மலர் வேந்தன், வேல் குமார், சிவராம், கலையரசன், பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வு முடிவு வெளியாகும் தேதி அறிவிப்பு

சென்னை, டிச.17

டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ தேர்வு முடிவு வரும் ஜனவரி 12ம் தேதி வெளியாகிறது.

5446 பணியிடங்களுக்கு கடந்த பிப்ரவரி 25ம் தேதி நடந்த மெயின் தேர்வு முடிவு வெளியிடப்படும் என அறிவிப்பு

குரூப் 2 தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மேலும், குரூப் 2 தேர்வு தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே சமயத்தில் பல தேர்வுகள் நடத்த வேண்டிய சூழல், மிச்சாங் புயலால் விடைத்தாள் திருத்தும் பணியில் தாமதம் எனவும் டிஎன்பிஎஸ்சி தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# திகைக்க வைத்த திருமாவளவன்

சென்னை, டிச.17

வெள்ள நிவாரண பணிகளுக்கு செலவிட்ட ரூ.4 ஆயிரம் கோடி தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று எதிர்கட்சிகள் குரல் கொடுத்து வரும் நிலையில் தி.மு.க. கூட்டணி கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனும் வெள்ளை அறிக்கை வெளியிடலாம் என்று கூறி இருப்பது தான் பலரது புருவங்களை உயர்த்த வைத்துள்ளது.

கூட்டணி நிலைப்பாட்டில் மாற்றத்துக்கான அறிகுறியா என்பது தான் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

தி.மு.க.வி.சி.க. கூட்டணி எவ்வளவு வலுவாக இருக்கிறது என்ற கேள்விக்கு பதிலளித்த தி.மு.க.வின் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, "வெள்ளை அறிக்கை அவசியம் என்றால் வெளியிடுவதில் தவறில்லை என திருமாவளவன் கூறியிருக்கிறார். ஒவ்வொரு கட்சியும் தங்கள் எதிர் கருத்துகளை சொல்வார்கள். எல்லோரும் ஒரே கட்சி இல்லையே. அவர்களுக்கென தனி கொள்கை இருக்கிறது. மக்களவை தேர்தல், சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தலை வி.சி.க.வுடன் இணைந்தே சந்தித்து உள்ளோம். எங்களின் கூட்டணி வலுவாக இருக்கிறது என்றார்.

# சென்னை விமான நிலையத்தில் பயணியின் கைப்பையில் துப்பாக்கி குண்டு

ஆலந்தூர், டிச.17

சென்னையில் இருந்து மதுரை செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம், நேற்று காலை புறப்பட தயாராக இருந்தது. அந்த விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகளின் உடமைகளை, சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் ஸ்கேன் மூலம் பரிசோதித்து அனுப்பினர். அப்போது அமெரிக்காவில் வசிக்கும் தமிழ்நாட்டை சேர்ந்த விஜய கிருஷ்ணா (வயது 35) என்ற பயணியின் கைப்பையை ஸ்கேனில் பரிசோதித்த போது, அபாய எச்சரிக்கை மணி ஒலித்தது.

இதனால் பரபரப்படைந்த பாதுகாப்பு அதிகாரிகள், பயணியின் கைப்பையை தனியே எடுத்து சென்று பரிசோதித்தனர். அந்த கைப்பைக்குள், துப்பாக்கியில் பயன்படுத்தும் குண்டு ஒன்று இருந்ததை கண்டுபிடித்தனர். அது 9 எம்.எம் ரகத்தை சேர்ந்த குண்டு ஆகும். இதையடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் பயணி விஜய கிருஷ்ணாவிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது விஜய கிருஷ்ணா, 'தான் அமெரிக்காவில் வசிப்பதாகவும், காலையில் லண்டனிலிருந்து, பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில், சென்னை சர்வதேச விமான நிலையம் வந்து விட்டு, தற்போது டிரான்சிட் பயணியாக மதுரை செல்ல உள்நாட்டு விமான நிலையம் வந்துள்ளதாகவும் தெரிவித்தார். தான் அமெரிக்காவில் ரைபிள் கிளப் உறுப்பினர். எனவே எனது சொந்த உபயோகத்திற்காக துப்பாக்கி குண்டுகளை, அமெரிக்காவில் இருக்கும்போது, ஆன்லைனில் வாங்கினேன், அதில் ஒரு குண்டு தவறுதலாக இந்த பையில் இருந்திருக்கிறது. நான் அந்தப் பையை கவனிக்காமல் எடுத்து வந்து விட்டேன்'என்று தெரிவித்தார்.

ஆனாலும் பாதுகாப்பு அதிகாரிகள் விஜய கிருஷ்ணாவின் பயணத்தை ரத்து செய்து, அவரையும், துப்பாக்கிக் குண்டையும், சென்னை விமான நிலைய போலீசில் ஒப்படைத்தனர்.

சென்னை விமான நிலைய போலீசார், இது சம்பந்தமாக விஜய் கிருஷ்ணாவிடம் மேலும் விசாரணை நடத்தினர். அதன் பின்பு,துப்பாக்கிகுண்டை பறிமுதல் செய்த போலீசார், பயணி விஜய கிருஷ்ணாவை, விசாரணைக்கு அழைக்கும் போது, மீண்டும் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நேற்று இரவு அனுப்பி வைத்துள்ளனர்.

# போலி கல்வி நிறுவனம் நடத்தி 500 பேருக்கு சான்றிதழ்கள்: 4 பேர் கைது

சென்னை, டிச.17

சென்னை வில்லிவாக்கம் பகுதியில் போலியாக கல்வி நிறுவனம் நடத்தி சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் விசா கேட்டு விண்ணப்பித்த நபர் ஒருவர் அளித்த கல்வி சான்றிதழ் போலியானது என்பதை தூதரக அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இது தொடர்பாக அமெரிக்க தூதரகம் சார்பில் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதன் பேரில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர். இதில் வில்லிவாக்கத்தில் செயல்பட்டு வந்த போலி கல்வி நிறுவனம் 500 பேருக்கு போலி சான்றிதழ்களை வழங்கி இருப்பது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக இன்று கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் அளித்த பேட்டியில், இந்த மோசடியின் பின்னணியில் அரசியல் தொடர்பு உள்ளதா? வேறு யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது? என்பது பற்றியெல்லாம் விசாரித்து வருவதாக தெரிவித்தார்.

# எழும்பூரில் நாளை ஆதரவாளர்களுடன் ஓ.பி.எஸ் சந்திப்பு; முக்கிய ஆலோசனை

சென்னை, டிச.17

அ.தி.மு.க.வில் இருந்து ஓரம் கட்டப்பட்டுள்ள ஓ. பன்னீர்செல்வம் அடுத்து என்ன செய்யப் போகிறார்? என்பது அரசியல் களத்தில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வை முழுமையாக கைப்பற்றி இருக்கும் நிலையில் ஓ.பன்னீர்செல்வத்தின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகவே மாறி இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

இருப்பினும் ஓ.பன்னீர் செல்வம் தனது ஆதரவாளர்களை தக்க வைக்கும் வகையில் அவர்களுக்கு மாவட்ட செயலாளர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள் என பொறுப்புகளை வழங்கியுள்ளார். எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. பொதுச்செயலாளராக அங்கீகரிக்கப்பட்ட பிறகும் அ.தி.மு.க. கொடி மற்றும் சின்னத்தை ஓ. பன்னீர்செல்வமும் அவரது ஆதரவாளர்களும் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் இதற்கும் எடப்பாடி பழனிசாமி சட்ட நடவடிக்கைகள் மூலமாக முட்டுக்கட்டை போட்டார். இதனால் கடந்த சில நாட்களாகவே ஓ.பன்னீர்செல்வம் கட்சி கொடி, சின்னம், லெட்டர் பேடு போன்றவற்றை பயன்படுத்தாமலேயே உள்ளார்.

இந்த நிலையில் பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் சூழலில் ஓ.பன்னீர் செல்வத்தின் அரசியல் நிலைப்பாடு என்ன? என்பது மிகப்பெரிய கேள்வியாக உருவெடுத்து உள்ளது. இது தொடர்பாக தெளிவான முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அவர் உள்ளார். பொதுக்குழு தீர்மானங்கள் தொடர்பான மேல்முறையீட்டு வழக்கில் அடுத்த மாதம் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு பிறப்பிக்க உள்ள நிலையில் ஓ.பன்னீர்செல்வம் நாளை (திங்கட்கிழமை) தனது ஆதரவாளர்கள் கூட்டத்தை சென்னையில் கூட்டியுள்ளார்.

எழும்பூர் அசோகா ஓட்டலில் அன்று காலை 10 மணிக்கு தலைமைக்கழகம் மற்றும் மாவட்ட கழக செயலாளர்களின் ஆலோசனை கூட்டம் அரசியல் ஆலோசகர் பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஓ.பி.எஸ். ஆதரவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள



அழைப்பு கடிதத்தில், " முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் ஒப்புதலோடு கூட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பெயரை பயன்படுத்தாமல் தலைமைக்கழகம் என்றே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரட்டை இலை சின்னமோ,அ.தி.மு.க.கலரோ இல்லாமல் கூட்டத்துக்கான அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் பங்கேற்கும் ஓ.பன்னீர்செல்வம் தனது எதிர்கால அரசியல் பயணம் பற்றி முக்கிய முடிவுகளை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவையில் ஜனவரி மாதம் 6ந்தேதி மண்டல மாநாடு நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு உள்ளது. அந்த மாநாட்டை குறிப்பிட்ட தேதியில் நடத்தலாமா? இல்லை ஜனவரி 11ந்தேதி வெளியாக உள்ள சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு பிறகு நடத்தலாமா? என்பது பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

இந்த மாத இறுதியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய திட்டமிட்டுள்ளதாக அவரது ஆதரவு மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பாகவும் நாளை மறுநாள் நடைபெறும் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளன. கூட்டத்தில் 88 மாவட்ட செயலாளர்கள் உள்பட 300 பேர் பங்கேற்க உள்ளனர்.

இதன் பின்னர் வருகிற 20ந்தேதி கீழ்ப்பாக்கத்தில் நடைபெறும்கிறிஸ்துமஸ் விழாவில் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொள்கிறார். கீழ்ப்பாக்கம் தேர்ச்சை திருத்தல மாதா ஆலயத்தில் இந்த விழா நடக்கிறது.

இதன்பிறகு ஓ.பி.எஸ். சுற்றுப்பயணத்தை தொடங்குவார்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# யாருடன் கூட்டணி என்பது குறித்து விரைவில் முடிவு: டி.டி.வி.தினகரன் பேட்டி

தஞ்சாவூர், டிச.17

தஞ்சாவூர் புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் பகுதியில் 10 மாவட்டங்களிலுள்ள அ.ம.மு.க சட்டப்பேரவைத் தொகுதிகளின் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பொது செயலாளர் டி.டி.வி.தினகரன் கலந்து கொண்டு பேசினார்.



முன்னதாக அவர் நிருபர்களுக்குஅளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

வருகிற பாராளுமன்றத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது குறித்து டிசம்பர் இறுதி அல்லது ஜனவரி மாதத்தில் முடிவு செய்யப்படும்.

தஞ்சாவூர் தொகுதியில் நான் நிற்பதாகக் கூறுவது ஊக அடிப்படையிலான தகவல். வருகிற தேர்தலில் நான் நிற்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வது மத்திய அரசின் கடமை. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய எம்.பி.க்களை இடை நீக்கம் செய்தது சரியான நடவடிக்கை இல்லை. இந்த நடவடிக்கையை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.

சென்னை பேரிடர் தொடர்பாக தமிழக அரசு கோரிய நிதியை மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை. காவிரி என்பது தமிழ்நாட்டுக்கு ஜீவாதார பிரச்சனை. மேகதாதுவில்கர்நாடகஅரசுஅணை கட்டினால் தமிழ்நாடு பாலைவனமாகிவிடும். இது சட்டத்துக்கு புறம்பானது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவிலின் லாக்கரை உடைத்து ரூ.3 லட்சம் கொள்ளை

கடலூர், டிச.17

கடலூர் வண்டிபாளையத்தில் பிரசித்தி பெற்ற சிவசுப்பிரமணியசாமி கோவில் உள்ளது. இன்று காலை வழக்கம் போல் கோவில் ஊழியர், கோவிலை திறந்து உள்ளே சென்று பார்த்தார். அப்போது கோவிலுக்குள் இருந்த அறை திறந்து கிடந்தது. அறைக்குள் வைக்கப்பட்டிருந்த லாக்கர் உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறி கிடந்தது.

இது குறித்து கோவில் நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்தார். அவர்கள் நேரில் வந்து பார்வை



யிட்டு கடலூர் முதுநகர் போலீசாருக்கு தகவல் அளித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் விசாரணை நடத்தினர். இதில், கோவிலுக்குள் வந்த மர்ம நபர் அங்கிருந்த சமையலறை வழியாக லாக்கர் இருந்த ரூமிற்கு சென்றுள்ளார். பின்னர் லாக்கரை உடைத்து அதில் இருந்த ரூ.3 லட்சத்தை திருடி சென்றது தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து முக்கிய தடயங்களை சேகரித்தனர். இது குறித்து கடலூர் முதுநகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் உதயகுமார். வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இத்தகவல் காட்டு தீ போல் பரவியதால் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கோவிலுக்கு திரண்டு வந்து பார்வையிட்டு செல்கின்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பாக காணப்பட்டு வருகின்றது.

# "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற 71 இடங்களில் முகாம்: கலெக்டர் தகவல்

திருப்பூர், டிச.17

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று துவக்கி வைக்க உள்ளார்கள். திருப்பூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி) வார்டு வாரியாக கீழ்கண்ட துறைகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற 18.12.2023 முதல் 05.01.2024 வரை 71 இடங்களில் முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊராக வளர்ச்சி மற்றும் ஊராச்சித் துறை, எரிசக்தி துறை/ தமிழநாடு மின்சார வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றம் திறன் மேம்பாட்டுத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, கூட்டுறவுத்துறை, காவல் துறை, மாவட்ட தொழில் மையம். இம்முகாமினை பயன்படுத்தி பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காண கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர்ப்புறங்களில் நடத்தப்படும் முகாம்கள் முடிவுற்ற பின்னர், அடுத்த கட்டமாக மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்தப்படும். ஊரகப் பகுதிகளில் நடைபெறும் முகாம்கள் குறித்தான நாள் மற்றும் இடங்கள் பின்னர் தனியே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# தென்காசி புளியங்குடி அருகே மினி குற்றாலம். அடிப்படை வசதி வேண்டி பொதுமக்கள் கோரிக்கை

தென்காசி, டிச.17

தென்காசி மாவட்டம் புளியங்குடி, அருகே உள்ள கற்பக நாச்சியார் அம்மன் கோவிலில் உள்ள சிறிய நீர்விழ்ச்சியில் மக்கள் குளிப்பதற்கு ஏற்ற வசதிகள் செய்து தரவேண்டும் என்று கோவிலுக்கு வரும் பக்தர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுகின்றனர்.

புளியங்குடியில் இருந்து சுமார் எட்டு கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது முந்தல் .

இங்கு சுமார் இருநூறு ஆண்டுகள் பழமையான கற்பக நாச்சியார் அம்மன் கோவில் உள்ளது.

அறநிலையத்துறை கட்டுபாட்டில் உள்ள இந்த கோவிலில் நித்ய பூஜை மட்டுமன்றி மலை மேல் கார்த்திகை தீபம் ,பௌர்ணமி பூஜை, பிரதோஷ வழிபாடு,விளக்கு பூஜை, உட்பட அனைத்து பூஜைகளும் சிறப்பாக செய்யப்படுகிறது.

இங்கு மலை பாறைகளில் இருந்து வற்றாத ஊற்று நீர் வருகிறது இந்த ஊற்று நீர் மழை காலங்களில் குறிப்பாக நவம்பர்,

டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் சுமார் முப்பதடி உயரத்தில் இருந்து சிறிய நீர் வீழ்ச்சியாக விழுகிறது.

இதனை ஒட்டி புளியங்குடி பகுதி மக்கள் மட்டுமன்றி சுற்று வட்டார பகுதிகள் அனைத்திலும் இருந்து மக்கள் ,

சாமி தரிசனம் செய்யவும் , இங்கு குளிப்பதற்கும் வருகின்றனர்.

தண்ணீர் விழும் இடம் பாறையாக இருப்பதும் அதனை ஒட்டி பள்ளமாக இருப்பதால் பெண்களும்,

குழந்தைகளும் குளிக்க மிகுந்த சிரமப்படுகின்றனர்.அந்த பள்ளத்தை நிரப்பி சரி செய்து கொடுத்தால் மக்கள் பயமின்றி குளிக்க வசதியாக இருக்கும் என்று மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

இது பற்றி பௌர்ணமி பூஜை அறக்கட்டளை குழு தலைவர் சுந்தரவேலு என்ற கனி கூறுகையில் ஜமீன்தார்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்த கற்பக நாச்சியார் அம்மன கோவில் பிரசித்தி பெற்றது. அறநிலையத்துறை கட்டுப்பாடில் உள்ள கோவிலில் நடைபெறும் பௌர்ணமி பூஜைக்கு புளியங்குடி பகுதி மக்கள் மட்டும் மின்றி தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து பொதுமக்கள் மட்டுமின்றி அரசியல் பிரமுகர்களும் , வருகின்றனர். இங்கு மழைகாலமான நவம்பர்,

டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் தண்ணீர்



சிறிய நீர் வீழ்ச்சியாக விழுகிறது.

மேலும் தண்ணீர் விழும் இடத்தில் சமதளமாக இல்லாமல் நான்கு அடி பள்ளம் உள்ளது.இரவு நேரங்களில் வரும் சமுக விரோதிகள் பாட்டில் போன்றவற்றை அங்கு உடைத்து போட்டு விடுகின்றனர். மேலும் தண்ணீரின் வேகத்தில் குளிக்கும் பெண்கள், குழந்தைகள் பாறையில் இருந்து கீழே விழுந்து விடுகின்றனர். அந்த பள்ளத்தை நிரப்பி கான்கீரிட் போட்டு சமதளமாக செய்து கொடுத்தால் பெண்கள் ,குழந்தைகள் பயமின்றி குளிக்க முடியும்.அந்த இடத்தையும் சுத்தமாக பாரமரிக்க முடியும் .மலையில் இருந்து தண்ணீர் வரும் பாதையில் சிறிய தடுப்பணை கட்டி வைத்தால் தண்ணிரின் வரத்து சீராக இருக்கும் மிக சிறந்த சுற்றுலா தளமாக மாற்ற முடியும் ,மேலும் மலையில் உள்ள மிருகங்களுக்கும் உதவியாக இருக்கும் .இதனை அரசு தரப்பு செய்து கொடுக்க வேண்டும் என்று கூறினார்

# மின்சாரம் தாக்கி 2 சகோதர்கள் பலி

பொன்னேரி, டிச.17

பொன்னேரி அடுத்த ஞாயிறு ஊராட்சி கன்னியம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் முனுசாமி. இவரது மகன்கள் விஷ்வா (12) சூர்யா (9).

இருவரும் வீட்டின் அருகில் உள்ள வயல் வெளிக்கு சென்றனர். அப்போது பம்பு செட்டின் அறையில் அருகில் கீழே கிடந்த இரும்பு பைப்பை இருவரும் மிதித்தனர். அதன் வழியாக மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நீண்ட நேரம் ஆகியும் குழந்தைகள் வராததால் தேடிய பெற்றோர்கள் குழந்தை வயல்வெளியில் இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் அருகில் உள்ளவர்கள் உதவியுடன் மின்சாரத்தை துண்டித்து சோழவரம் காவல் நிலையத்திற்கு புகார் தெரிவித்து போலீசார் உடலை கைப்பற்றினார்.

இருவரின் உடல்களை கைப்பற்றி போலீசார் பிரேத பரிசோதனைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து சோழவரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு உள்ளனர். பள்ளி செல்லும் சகோதர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்திருப்பது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கூடலூர் நகராட்சியில் கனமழையால் சேதமடைந்த சாலைகள் பாலங்கள் ஆய்வு



மேட்டுப்பாளையம், டிச.17

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி கூடலூர் நகராட்சியில் கடந்த வாரம் பெய்த கனமழையால் பல்வேறு வார்டுகளில் உள்ள தரைப்பாலங்கள், சாலை சேதமடைந்தது.

இதனையொட்டி, அச்சிக்கலை சரிசெய்திட கூடலூர் நகராட்சி உடனடி நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாக இயக்குனர் டாக்டர் இளங்கோவன், நகர மன்ற தலைவர் அறிவரசு ஆகியோர் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டார். அதன்படி, கூ. கவுண்டம் பாளையம் முதல் காட்டாஞ்சி சாலை செல்லக்கூடிய எப்4 கார்டன் சாலை, வட்டப்பாறைப் புதூர் பாலம், தோல்சாப்மேடு, திருமலைநாயக்கன் பாளையம், சாமிசெட்டிபாளையம், வடக்கு காமராஜ் நகர் பகுதி ஆகிய இடங்களில் புதிய பாலங்கள் அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இப்பணியில், நகரமன்றத் துணைத் தலைவர் ரதி ராஜேந்திரன், நகராட்சி ஆணையர் மனோகரன், நகராட்சி பொறியாளர் சோமசுந்தரம், நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் பத்மராஜ், நகரமன்ற உறுப்பினர்கள் சாந்தாமணி, ரேவதி, ரம்யா, மணிமேகலை, சித்ரா, துரை. செந்தில்குமார், பாலசுப்ரமணியம், தவமணி ஆகியோர் உடனிருந்தனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 17.12.2023



# உதயநிதியிடம் ரூ.6 லட்சம் கொடுத்த வடிவேலு.. ஏன் தெரியுமா?

தமிழ் பட உலகில் முன்னணி நகைச்சுவை நடிகராக கலக்கிய வடிவேலுவுக்கு வயதானவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைத்து வயதிலும் ரசிகர்கள் உள்ளனர். இம்சைஅரசன் 24ம் புலிகேசி படத்தில் ஏற்பட்ட பிரச்சனையால் சில வருடங்களாக படங்களில் நடிக்காமல் இருந்தார். இதையடுத்து சுராஜ் இயக்கத்தில் நாய் சேகர் ரிட்டன்ஸ் என்ற படம் மூலம் ரீஎன்ட்ரி கொடுத்தார்.

இதைத்தொடர்ந்து மாரிசெல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் கதாநாயகனாக நடித்த 'மாமன்னன்' திரைப்படத்தில் உதயநிதிக்கு அப்பாவாக நடித்து பாராட்டை பெற்றார். தொடர்ந்து பி. வாசு இயக்கத்தில் வெளியான 'சந்திரமுகி 2' திரைப்படத்திலும் நடித்து கவனம் பெற்றார்.

இந்நிலையில், நடிகர் வடிவேலு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கும் ரூ.6 லட்சம் கொடுத்துள்ளார். இதனை தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள அமைச்சர் உதயநிதி பதிவு ஒன்றையும் பகிர்ந்துள்ளார். அதில், "மிச்சாங் புயல் மற்றும் கன மழையால் ஏற்பட்ட பாதிப்பைசீரமைக்க,கழகஅரசுமுனைப்புடன்செயல்பட்டு வருகிறது.

இந்த சூழலில், அரசின் மீட்பு நிவாரணப் பணிகளுக்கு உதவிடும் வகையில், 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு திரைக்கலைஞர் அண்ணன் வடிவேலு அவர்கள் ரூ.6 லட்சத்துக்கான காசோலையை இன்று நம்மிடம் வழங்கினார். அவருக்கு என் அன்பும், நன்றியும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஹிரித்திக் ரோஷனின் ஷேர் குல் கயே பாடல் வெளியானது



இந்தியாவின் நடன சூப்பர் ஸ்டார் என்று பலராலும் அழைக்கப்படுபவர் ஹிரித்திக் ரோஷன். இவர் நடிப்பில் தற்போது ஃபைட்டர் என்ற திரைப்படம் உருவாகியுள்ளது. ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் 'ஷேர் குல் கயே' என்ற பாடலை படக்குழுவினர் தற்போது வெளியிட்டுள்ளனர். இந்த பாடல் முழுக்க ஹிரித்திக் ரோஷனின் நடன அசைவுகள் இடம்பெற்று இருப்பதால் அதிவேகமாக வைரல் ஆகி வருகிறது. நடன அசைவுகளில் தனக்கு நிகர் இல்லை என்ற அளவுக்கு ஆடும் திறன் கொண்ட ஹிரித்திக் ரோஷன், 'ஷேர் குல் கயே' பாடலிலும் தனக்கே உரிய பாணியில் நடனத்தை மிரட்டியுள்ளார். ஹிரித்திக் திரையுலகில் 'கஹோ நா ப்யார் ஹே' 'கபி குஷி கபீ கம்', 'தூம் 2' போன்ற படங்களில் ஆடியதை யாரும் இன்றளவும் மறக்க முடியாத வகையில் உள்ளது. இந்த வரிசையில் ஃபைட்டர் படமும் இணைந்து இருக்கிறது.

சித்தார்த் ஆனந்த் இயக்கத்தில் ஃபைட்டர் படம் உருவாகி இருக்கிறது. இந்த படத்தில் போர் விமானியாக ஹிரித்திக் நடித்துள்ளார். இவரது கதாபாத்திரத்திற்கு ஷாம் ஷெர் பதனியா என்கிற பேட்டி என பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஹிரித்திக் ரோஷனுடன் தீபிகா படுகோனே மற்றும் அனில் கபூர் ஆகியோர் நடித்துள்ளனர். ஃபைட்டர் படத்தின் டீசர் அதிரடி ஆக்ஷன் மூலம் ஏற்கனவே படத்திற்கான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வரிசையில் 'ஷேர் குல் கயே' பாடலில் ஹிரித்திக் நடனத்தை பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு ஜனவரி 25ம் தேதி ஃபைட்டர் படத்தை வெளியிடும் பணிகளில் படக்குழு இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

# எனக்கு ஆதரவாக நின்ற அனைவருக்கும் நன்றி நடிகர் பிரகாஷ் ராஜ் ட்வீட்



திருச்சியை தலைமையிடமாக கொண்டு இயங்கும் பிரணவ் ஜூவல்லரி நகைக்கடையினர் சட்டவிரோத பணபரிமாற்றத்தில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறையினர் வழக்கு பதிவு செய்து சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் கணக்கில் வராத 11.60 கிலோ எடையுள்ள தங்கநகைகளும், 23.70 லட்சம் ரொக்கப்பணமும் கைப்பற்றப்பட்டதாக அமலாக்கத்துறை அறிவித்தது.

இதன் தொடர்ச்சியாக பல்வேறு நபர்களிடம் அமலாக்கத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக பிரணவ் ஜூவல்லரி நகைக்கடை விளம்பரத்தில் நடித்த நடிகர் பிரகாஷ் ராஜூக்கும் இந்த விவகாரத்தில் தொடர்பு இருக்கலாம் என அமலாக்கத்துறை அவருக்கு சம்மன் அனுப்பியது.

ஆனால், கடையின் உரிமையாளர் மதனை காவலில் எடுத்து விசாரித்து வரும் நிலையில், இந்த மோசடியில் பிரகாஷ்ராஜுக்கு தொடர்பு இல்லை என மதன் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரகாஷ்ராஜ் விளம்பரத்தில் மட்டும் நடித்ததாகவும், நிறுவனத்தில் எந்த முதலீடும் செய்யவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

மோசடியில் தொடர்பில்லாததால், பிரகாஷ்ராஜிடம் இது தொடர்பாக விசாரணை நடத்தப் போவதில்லை என முடிவெடுத்துள்ளதாக பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பிரணவ் நகைக்கடை மோசடி வழக்குக்கும் பிரகாஷ் ராஜூக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என புலனாய்வுக் குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுகுறித்து பிரகாஷ் ராஜ் தனது எக்ஸ் பக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழ் புரியாதவர்களுக்கு.. முக்கியச் செய்திகள்: புலனாய்வுக் குழுவின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு. நடிகர் பிரகாஷ் ராஜ் தமிழ்நாட்டின் பிரணவ் நகைக்கடை மோசடியில் ஈடுபடவில்லை.. என்னை நம்பி எனக்கு ஆதரவாக நின்ற அனைவருக்கும் நன்றி.. இவ்வாறு அவர் ஆங்கிலத்தில் பதிவிட்டுள்ளார்.

# பெரிய நடிகர்கள் உதவி செய்தால் மட்டுமே விளம்பரப்படுத்துகிறார்கள் ஆரி ஆதங்கம்



14 சர்வதேச விருதுகளை வென்ற தாய்நிலம் படத்தை இயக்கிய இயக்குனர் அபிலாஷ் ஜி.தேவன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரூட் நம்பர் 17'. இந்த படத்தில் கதாநாயகனாக ஜித்தன் ரமேஷ் நடித்துள்ளார். கதாநாயகியாக அஞ்சு பாண்டியா நடித்துள்ளார். ஹரிஷ் பெராடி வில்லனாக நடிக்க, அருவி மதன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் அமர் ராமச்சந்திரன், நிஹால், அகில் பிரபாகர், ஜெனிபர், பிந்து, கார்த்திக் விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் இந்த படத்தில் நடித்துள்ளனர்.

நேமி புரொடக்ஷன்ஸ் சார்பில் அமர் ராமச்சந்திரன் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்த படத்திற்கு பிரபல மலையாள இசையமைப்பாளர் அவுசப்பசன் இசையமைத்துள்ளார். இப்படம் வரும் 29ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதைத்தொடர்ந்து இப்படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தயாரிப்பாளர் டி.சிவா, பின்னணி பாடகிகள் சுஜாதா மோகன், ஸ்வேதா மோகன், நடிகைகள் வசுந்தரா, ஜித்தன் ரமேஷுடன் பிக்பாஸ் நிகழ்ச்சியில் ஒன்றாக பங்கேற்ற நடிகர்கள் ஆரி, சுரேஷ் சக்கரவர்த்தி, சோமசேகர், அர்ச்சனா, அறந்தாங்கி நிஷா மற்றும் நடிகை கோமல் சர்மா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் நடிகர் ஆரி பேசியதாவது, நெடுஞ்சாலை சமயத்தில் அபிலாஷ் என்னிடம் ஒரு முறை கதை சொல்ல வந்தார். அப்போது இருந்து நல்ல பழக்கம். பின்னர் சில வருடங்கள் கழித்து தபால் அலுவலகம் மூலமாக சேமிப்பு கணக்கு துவங்கலாம் என்கிற பிரசாரத்தை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் கேரளாவில் முன்னெடுத்த போது அங்கே எனக்கு உறுதுணையாக நின்று உதவிகளை செய்தவர் அபிலாஷ்.

ஜித்தன் ரமேஷுக்கு முன்னாடியே என்னிடம் இந்த கதையை அவர் சொல்லி இருக்கிறார். ஹீரோவாக நடித்து தோத்தவன் இருக்கிறான். ஆனால் வில்லனாக நடித்து தோத்தவன் யாரும் இல்லை. வில்லனாக காலடி எடுத்து வச்சிருக்கீங்க. இந்த சினிமா உங்களை நிச்சயம் உயரத்துக்கு கொண்டு போய் வைக்கும். நானும் அடுத்த வருடம் வெளியாகும் ஒரு படத்தில் உங்களை போலவே ஒரு வில்லனாக நடித்திருக்கிறேன்.

அதேபோல இந்த மழை வெள்ள காலத்தில் அறந்தாங்கி நிஷா, கே பி ஒய் பாலா ஆகியோர் செய்த உதவிகளை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. எல்லோருமே பெரிய நடிகர்கள் உதவி செய்தால் மட்டுமே விளம்பரப்படுத்துகிறார்கள். உதவி செய்தவர்கள் யாராக இருந்தாலும் கொடுத்தவர்களை கொண்டாட வேண்டும் அவர்களும் ஹீரோதான். தயாரிப்பாளர் அமர் ஒரு சாமானியனாக இருந்து மருத்துவராகி சினிமா கனவுடன் 5 படங்களை எடுத்து அதை ரிலீஸ் செய்தும் இருக்கிறார் என்றால் எந்த அளவிற்கு சினிமா மீது அவருக்கு ஆர்வமும் கடின உழைப்பும் இருக்கும் என்பது தெரிகிறது என்று கூறினார்.

# கரவாலி திரைப்படத்தின் போஸ்டர் வெளியானது



'அம்பி நீங்கே வயசாய்தோ' திரைப்படத்தை இயக்கியதன் மூலம் பிரபலம் அடைந்த குருதத்தா கனிகா இயக்கும் திரைப்படம் 'கரவாலி'. குருதத்தா கனிகா பிலிம்ஸ் பேனர் சார்பில் விகே பிலிம்ஸ் உடன் இணைந்து குருதத்தா கனிகா தயாரிக்கும் இந்த படத்தில் பிரஜ்வல் தேவராஜ் முதன்மை வேடத்தில் நடித்துள்ளார். சச்சின் பஸ்ரூர் இசையமைக்கும் இப்படத்திற்கு அபிமன்யு சதானந்தன் ஒளிப்பதிவை கவனிக்கிறார். இந்நிலையில் 'கரவாலி' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இந்த போஸ்டரில் பிரஜ்வல் தேவராஜ் இதுவரை பார்த்திராத கதாபாத்திரத்தில் தோன்றியுள்ளார். நமது கலாச்சாரம் மற்றும் மொழிகளில் விளைந்து வேரூன்றிய கதைகளை மக்களுக்கு சொல்வதற்காகவே தாம் தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி உள்ளதாக குருதத்தா கனிகா கூறினார்.

# கேப்டனாக 10 ஆண்டுகள்: ரோகித் சர்மாவை பாராட்டிய சென்னை சூப்பர் கிங்ஸ்




மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டனாக ஹர்திக் பாண்ட்யா அறிவிக்கப்பட்டுள்ளார். மும்பை அணியின் கேப்டனாக ரோகித் சர்மா செயல்பட்டு வந்த நிலையில், ஹர்திக் பாண்ட்யாவுக்கு கேப்டன் பதவி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

கேப்டன் பதவியில் சிறப்பாக செயல்பட்டதற்காக ரோகித் சர்மாவுக்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், மும்பை இந்தியன்ஸ் அணியில் 10 ஆண்டுகளாக கேப்டன் பொறுப்பு வகித்த ரோகித் சர்மாவுக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், 2013 முதல் 2023 வரை ஒரு பத்தாண்டு கால உற்சாகமான சவால், ரோகித்துக்கு மரியாதை என பதிவிட்டுள்ளது.

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்: முக்கிய வீரர் திடீர் விலகல்



இந்திய அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கு இடையே நடந்த டி20 தொடரில் இரு அணிகளும் 11 என சமனிலை வகித்தன. முதல் ஒருநாள் போட்டி நாளை தொடங்குகிறது

இந்நிலையில், ஒருநாள் போட்டிக்கான தொடரில் இருந்து தீபக் சாஹர் திடீரென விலகியுள்ளார். சொந்த வேலை காரணமாக விலகியுள்ளார் என பிசிசிஐ தெரிவித்துள்ளது. இதேபோல், டெஸ்ட் தொடரில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு நடத்தப்பட்ட

மருத்துவ பரிசோதனையின் முடிவில் அவர் நீக்கப்பட்டுள்ளார் எனவும் பிசிசிஐ அறிவித்துள்ளது.

ஒருநாள் தொடருக்கான இந்திய அணியின் விவரம் வருமாறு:

ருத்ராஜ் கெயிக்வாட், சாய் சுதர்சன், திலக் வர்மா, ரஜத் படிதார், ரிங்கு சிங், ஸ்ரேயாஸ் அய்யர், கே.எல். ராகுல் (கேப்டன்), சஞ்சு சாம்சன், அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், சஹல், முகேஷ் குமார், ஆவேஷ் கான், அர்ஷ்தீப் சிங், ஆகாஷ் தீப்

# ஜூனியர் ஆசிய கோப்பை கிரிக்கெட்: அரையிறுதியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் அதிர்ச்சி தோல்வி

19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை 50 ஓவர் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வருகிறது.

இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நான்கு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. ஒரு அரையிறுதியில் இந்தியா வங்காளதேச அணிகள் மோதின.

இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது. முஷின் கான் 50 ரன்களும, முருகன் அபிஷேக் 62 ரன்களும் எடுத்தனர். மற்ற பேட்ஸ்மேன்கள் சொற்ப ரன்களில் வெளியேற இந்தியா 42.4 ஓவர்களில் 188 ரன்னில் சுருண்டது. வங்காளதேச அணி சார்பில் மரூஃப் மிரிதா 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 189 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேச அணி களம் இறங்கியது. அந்த அணி 34 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது. ஆனால், அர்புல் இஸ்லாம் 90 பந்துகளில் 94 ரன்களும், அஹ்ரார் அமின் 101 பந்தில் 44 ரன்களும் அடிக்க வங்காளதேசம் 42.5 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 189 ரன்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முதலில் பேட்டிங் செய்து 47.5 ஓவரில் 193 ரன்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது. அந்த அணியின் தொடக்க வீரர் ஆர்யான்ஷ் சர்மா 46 ரன்களும், கேப்டன் அஃப்சல் கான் 55 ரன்களும் எடுத்தனர். பாகிஸ்தான் அணி சார்பில் உபைத் ஷா 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 194 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களம் இறங்கியது. அந்த அணியின் அசான் அவைஸ் 41 ரன்னில் ரன்அவுட் ஆனார். அடுத்து வந்த கேப்டன் சாத் பைக் 50 ரன்கள் சேர்த்தார். மற்றவர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 49.3 ஓவரில் 182 ரன்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது. இதனால் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 11 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

# தீப்தி சர்மா அசத்தல் பந்துவீச்சு: 347 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா




பெண்கள் கிரிக்கெட்டில் இங்கிலாந்து இந்தியா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இந்தியா 104.3 ஓவரில் 428 ரன்களில் ஆல் அவுட்டானது. சுபா சதீஷ், ஜெமிமா ரோட்ரிக்ஸ், யாஸ்திகா பாட்டியா மற்றும் தீப்தி ஷர்மா ஆகிய 4 வீராங்கனைகள் அரைசதமடித்து அசத்தினர். கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர் 49 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து சார்பில் லாரன் பெல், எக்லெஸ்டோன் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதையடுத்து தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 35.3 ஓவரில் 136 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. நாட் ஸ்கிவர்ப்ரண்ட் பொறுப்புடன் ஆடி அரை சதம் அடித்தார்.


இந்திய அணி சார்பில் தீப்தி சர்மா 5 விக்கெட்டும், ஸ்நே ரானா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

298 ரன்கள் முன்னிலை வகித்த நிலையில், இந்திய அணி 2வது இன்னிங்சை தொடர்ந்தது. இந்திய அணி 2வது இன்னிங்சில் 6 விக்கெட்டுக்கு 186 ரன்கள் எடுத்த நிலையில் டிக்ளேர் செய்தது. கேப்டன் ஹர்மன்ப்ரீத்கவுர் 44 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இங்கிலாந்து சார்பில் சார்லி தீன் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 479 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து 2வது இன்னிங்சில் களமிறங்கியது. இதிலும் இந்திய பந்துவீச்சாளர்கள் அபாரமாக பந்து வீசினர். சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன.

இறுதியில், இங்கிலாந்து 2வது இன்னிங்சில் 131 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் இந்திய அணி 347 ரன்கள் வித்தியாசத்தில் வென்று அசத்தியது.

இந்தியாவின் தீப்தி சர்மா 4 விக்கெட்டும், பூஜா 3 விக்கெட்டும், கெய்க்வாட் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.



கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

விளக்கம்:

பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்கும் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழையாகும்

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.